# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண்: 244 /மா/2022**

**நாள்: 18 .01.2023**

திரு. மூ.ஈஸ்வரன்,
திருத்தங்கல் – 626 130. – முறையீட்டு மனுதாரர்

ஆணையர்,
சிவகாசி மாநகராட்சி,
விருதுநகர் மாவட்டம் – எதிர்மனுதாரர்

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், திருத்தங்கல், வையன் வீதி, எண்.25 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மூ. ஈஸ்வரன் என்பவரின் 03.12.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 06.12.2022–ல் பெறப்பட்டு 244/மா/2022 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மேற்கண்ட மனுதாரரது மனு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தால் உரிய விசாரணை மேற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் பரிசீலனை செய்யப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், திருத்தங்கல், வையன் வீதி, எண்.25 என்ற முகவரியில் வசிக்கும் திரு. மூ. ஈஸ்வரன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள 03.12.2022 நாளிட்ட தனது மனுவில் :

" நான் கடந்த 15.09.2020 அன்று அரசாணை எண்.540ன் கீழ், கீழத்திருத்தங்கல் கிராமத்தில் உள்ள சர்வே எண்.1551/1A கொண்ட கடம்பன் குளம் கண்மாயில் சுண்ணாம்பு காளவாசல் கட்டி ஆக்கிரமிப்பு இருப்பதை குறித்து சிவகாசி வட்டாட்சியரிடம் மனு செய்து இருந்தேன்.

மேற்கண்ட மனுவின் மீது சிவகாசி வருவாய் வட்டாட்சியர் உரிய விசாரணை மேற்கொண்டு கடந்த 28.09.2021-மு-மு.ஆ.1/5698/2020 கோப்பிட்ட உத்தரவு பிறப்பித்திருந்தார். மேற்கண்ட உத்தரவில் சிவகாசி வட்டம், கீழத்திருத்தங்கல் கிராமம், புல எண்.1551/1A அரசு

புறம்போக்கு கடம்பன்குளம் கண்மாயில் திருத்தங்கல் கிராமத்தினைச் சேர்ந்த இன்னாசிமுத்து மகன் மரியயாகப்பன் என்ற செல்வம் என்பவர் 0.07.58 ச.மீ. அளவிற்கு ஆக்கிரமிப்பு செய்து சுண்ணாம்பு காளவாசல் கட்டி ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என சிவகாசி மண்டல துணை வட்டாட்சியர் அறிக்கை செய்துள்ளார்.

எனவே, சிவகாசி வட்டம், கீழத்திருத்தங்கல் கிராமம், புல எண். 1551/1A நீர்வழி அரசு புறம்போக்கில் ஏற்படுத்தப்பட்டுள்ள சுண்ணாம்பு காளவாசல் ஆக்கிரமிப்பினை தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டத்தின் கீழ் உள்ள நடைமுறைகள் பின்பற்றி அகற்றுமாறு திருத்தங்கல் நகராட்சி ஆணையாளருக்கு உத்தரவு பிறப்புவிக்கப்பட்டு இருந்தார். மேலும் நீர்வழி புறம்போக்கு ஆக்கிரமிப்பு என்பதால் தனிகவனம் செலுத்தி அகற்றி அறிக்கை அளிக்குமாறும் கேட்கப்பட்டு உத்தரவு அளித்து உள்ளார்.

ஆனால் மேற்காண் ஆக்கிரமிப்புகளை மேற்காண் அதிகாரிகள், மேற்கண்ட உத்தரவுகளை மதிக்காமல் ஆக்கிரமிப்புகளை அகற்றாமல் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. எனவே மேற்காண் அதிகாரிகள் மேற்காண் வட்டாட்சியரின், ஆக்கிரமிப்புகளை அகற்ற உத்தரவு இட்ட ஆணையின்படி மேற்கண்ட ஆக்கிரமிப்பினை அகற்ற வேண்டும் எனக்கேட்டுக்கொள்கிறேன்'' என்று தெரிவித்துள்ளார்.

2) இம்மனு தொடர்பாக மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோரை 03.01.2023 அன்று நாகர்கோவில் முகாமில் நேரடி விசாரணைக்கு ஆஜராகும்படி 21.12.2022 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

3) மனுதாரர் 03.01.2023 அன்று நடைபெற்ற நேரடி விசாரணையில் ஆஜராகவில்லை.

4) சிவகாசி மாநகராட்சியின் நகரமைப்பு அலுவலர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் ஆகியோர் 03.01.2023 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி தங்களது வாக்குமூலத்தை பின்வருமாறு சமர்ப்பித்துள்ளனர் :

" மனுதாரர் தனது மனுவில் குறிப்பிட்டுள்ள கீழத்திருத்தங்கல் கிராமம் சர்வே எண் 155/1A கடம்பன் குளம் கண்மாயில் உள்ள 0.07.58 சதுரமீட்டர் பரப்பில் உள்ள சுண்ணாம்பு காளவாசல் ஆக்கிரமிப்பின் ஒரு பகுதி அகற்றப்பட்டுவிட்டது என்பதை தெரிவித்து அதன் புகைப்படங்களை இம்முறை மன்றத்தில் சமர்ப்பிக்கிறோம். இந்நேர்வு தொடர்பாக சிவகாசி மாநகராட்சியின் மூலம் மாவட்ட சார் ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோருக்கு விரைவில் கடிதம் அனுப்பப்படும் என்பதையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்நேர்வு தொடர்பாக சிவகாசி மாநகராட்சி ஆணையரின் 23.12.2022 நாளிட்ட அறிக்கையில் கண்டுள்ள விவரங்களையும் எங்களது வாக்குமூலமாக எடுத்துக்கொள்ளும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறோம்" என சமர்ப்பித்துள்ளனர்.

5) சிவகாசி மாநகராட்சி ஆணையர் தனது 23.12.2022 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:

" மனுதாரர் திரு மூ.ஈஸ்வரன் என்பவர் தனது மனுவில் கீழத்திருத்தங்கல் கிராமம் சர்வே எண்.155/1Aல் கடம்பன்குளம் கண்மாயில் 0.07.58 சதுர மீட்டர் பரப்பளவில்

ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள சுண்ணாம்பு காளவாசலை அகற்ற நடவடிக்கை எடுக்க கோரி **14.10.2022** தேதியில் மனு செய்திருந்தார். நகரமைப்பு ஆய்வாளர் குறிப்பின்படி மனுவில் குறிப்பிட்டுள்ள **0.07.58** சதுர மீட்டர் பரப்பில் உள்ள சுண்ணாம்பு காளவாசல் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுவிட்டது. அதன் புகைப்பட நகல்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி கண்மாய் சிவகாசி மாநகராட்சி கட்டுப்பாட்டில் இல்லை எனவும், வருவாய் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள கண்மாய் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்" என்று தெரிவித்துள்ளார்.

**6)** முறையீட்டு மனுதாரரின் புகார் மனு சிவகாசி மாநகராட்சி நகரமைப்பு அலுவலர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலம் மற்றும் சிவகாசி மாநகராட்சி ஆணையரின் அறிக்கை ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன. பரிசீலனையில் பின்வரும் விவரங்கள் தெரிய வருகின்றன.

விருதுநகர் மாவட்டம், திருத்தங்கலைச் சேர்ந்த திரு மூ.ஈஸ்வரன் என்பவர், சிவகாசி வட்டம், கீழத்திருத்தங்கல் கிராமம் புல எண். **155/1A**ல் உள்ள கடம்பன் கண்மாயை சுண்ணாம்பு காளவாசல் கட்டி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளதாகவும் அதனை அகற்றிடவேண்டி தன்னுடைய மனுவில் கோரியுள்ளார்.

புல எண்.**155/1A** சர்க்கார் புறம்போக்கில் **0.07.58** சதுர மீட்டரில் சுண்ணாம்பு காளவாசல் கட்டி ஆக்கிரமிப்பு செய்யப்பட்டுள்ளது என்பதும், சிவகாசி மாநகராட்சி ஆணையாளர், மனுதாரர் குறிப்பிட்ட புல எண் **155/1A**ல் கடம்பன்குளம் கண்மாயில் **0.07.58** சதுர மீட்டரில் செய்யப்பட்ட ஆக்கிரமிப்பான சுண்ணாம்பு காளவாசல் அகற்றப்பட்டு விட்டது என தன்னுடைய **23.12.2023** நாளிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளதும் அறியமுடிகிறது. ஆனால் எப்போது அகற்றப்பட்டது என்ற விவரத்தை தெரிவிக்கவில்லை. மேலும் மேற்படி கண்மாய் சிவகாசி மாநகராட்சி கட்டுப்பாட்டில் இல்லை என்பதையும் சிவகாசி மாநகராட்சி ஆணையாளரின் அறிக்கையிலிருந்து அறியமுடிகிறது. விருதுநகர் மாவட்டம் சிவகாசி மாநகராட்சி நகரமைப்பு அலுவலர் மற்றும் நகரமைப்பு ஆய்வாளர் தங்களுடைய வாக்குமூலத்தில் மனுதாரர் குறிப்பிட்ட ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுவிட்டது என்பதையும் இந்நேர்வு தொடர்பாக மாநகராட்சியின் மூலம் மாவட்ட சார் ஆட்சியர் மற்றும் வட்டாட்சியர் ஆகியோருக்கு கடிதம் அனுப்பப்படும் என்று தெரிவித்திருப்பதையும் அறியமுடிகிறது.

**நீர்நிலைகளின் மீது ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள கட்டடங்களை அகற்றிட, மாண்பமை உச்சநீதிமன்றத்திலும், சென்னை உயர்நீதிமன்றத்திலும், பல்வேறு தீர்ப்புகளில் கீழ்க்காணும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.**

A.Venkatachalam vs The Additional Chief Secretary on 6 October, 2017:-
"**encroachments on water bodies**"

"It is worthwhile to notice a Full Bench decision of this Court in W.P.No.1294 of 2009, dated 30.10.2015 (T.K.Shanmugam Vs. The State of Tamil Nadu and others), wherein the Full Bench has exhaustively dealt with the **encroach**ment on **water bodies**, the relevant portion of which are extracted hereunder:

"A Public Interest Litigation was filed by one Mr.L.Krishnan seeking for a direction against the Government and the Revenue officials to remove encroachments made by certain private parties in a Odai Poramboke in Villupuram District. While disposing of the Writ Petition, the Division Bench pointed out that ponds, tanks and lakes have been an essential part of the people's natural resources. However in recent years, these have been illegally **encroached** by unscrupulous persons and this has had adverse effect on the lives of the people. Further, it was pointed out that day in and day out, many petitions are filed by way of

Public Interest Litigation alleging encroachments into ponds/tanks/lakes/odai Poramboke etc., in different parts of the State, more particularly in villages. Having regard to the acute **water** scarcity prevailing in the State of Tamil Nadu, it was pointed out that a time has come where the State has to take some definite measures to restore the already earmarked **water** storage tanks, ponds and lakes as disclosed in the revenue records to its original states as part of its rain **water** harvesting scheme. The Court took judicial notice of the action initiated by the State Government by implementing the **water** harvesting scheme as a time bound programme. It was further pointed out that it is imperative that such natural resources provided for **water** shortage facilities are maintained by the State Government by taking all possible steps both by taking preventive measures as well as by removal of unlawful encroachments. After referring to the decision of the Hon'ble Supreme Court in the case of Hinch Lal Tiwari Vs. Kamal Devi reported in 2001 (6) SCC 496, it was held that the endeavour of the State should be to protect the material resources like Forests, Tanks, Ponds etc., in order to maintain ecological balance, which would pave the way to provide a healthy environment and enable the people to enjoy a quality life, which is essence of the right guaranteed under Article 21 of the Constitution. It was further held that in the State of Tamil Nadu having regard to the precarious **water** situation prevailing in the major part of the year, it is imperative that such noted **water** storage resources, such as tanks, odai, oornis, canals etc are not obliterated by encroachers.

A direction was issued to the State Government to identify all such natural **water** resources in different parts of the State and wherever illegal encroachments are found, initiate appropriate steps in accordance with the relevant provisions of law for restoring such natural **water** storage resources which have been classified as such in the revenue records to its original position so that the suffering of the people of the State due to **water** shortage is ameliorated.

". ... .... Cases of encroachment on **water bodies** are really alarming. **Water bodies** are potential source for drinking **water** for human and cattle. Only with a view to protect the same and to help the environment and develop ecology, the Government has enacted the Tamil Nadu Protection of Tanks and Eviction of Encroachment Act, 2007 (Tamil Nadu Act 8 of 2007). The very object of the Act is to find the exact boundary of each Tank in Tamil Nadu and also to detect encroachments for eviction as per the procedure laid down in the said Act. .. .. Occupation of the **water bodies** by way of encroachment will deprive **water** to the public in larger interest ignoring the Public Trust Doctrine. .. ... The Hon'ble Supreme Court as well as this Court, in a catena of decisions, have time and again held that no encroachment should be tolerated over the **water bodies** which constitute part of the precious natural resources.

P.Rengaraj vs The District Collector on 29 June, 2022 showing the contexts in which **encroachments on water bodies** appears in the document W.P.(MD)No.13514 of 2022.

The case of the petitioner that one aided school, ration shops and temples are located in the **water** body cannot be taken advantage to regularise the encroachment by the petitioner and others to continue the encroachment in **water** body.

**Durai Guna vs The District Collector on 24 August, 2022 - Encroachments on water bodies**

We answer the reference on the following terms:- The provisions of the Tamil Nadu Protection of Tanks and Eviction of Encroachment Act, 2007, does not in any manner dilute the observations / directions issued in L.Krishnan vs. State of Tamil Nadu reported 2005-3-L.W. 313 = 2005(4) CTC 1, as quoted with the approval by the Hon'ble Supreme Court in Jagpal Singh vs. State of Punjab, reported in 2011-3-L.W.17=(2011) 11 SCC 396, and the observations contained in paragraph 20(d)(3) of the judgment of Division Bench in T.S.Senthil Kumar, vs. Government of Tamil Nadu, reported in 2010-3-MLJ 771] and that the tanks which do not fall within the purview of the Tamil Nadu Protection of Tanks and Eviction of Encroachment Act, 2007, also require protection from encroachment and any

encroachment made in such tanks or **water bodies** have to be removed by following the provisions of the Tamil Nadu Land Encroachment Act, 1905."

Therefore, it goes without say that in case of the encroachment in **water** body, which comes under the revenue department, the revenue officials are entitled to proceed with eviction by invoking the provisions of Tamil Nadu Land Encroachment Act.

It is clear that all "Kuttai Poramboke" "Pond Poramboke" and other Poramboke lands belong to the Government are to be preserved for protecting the environment and for the usage of the public at large. There cannot be any leniency or misplaced sympathy in respect of such encroachments of the Government land and the authorities competent are duty bound to protect the same in all respects.

In as much as this writ petition has come before us by way of public interest litigation, we take this opportunity to direct the State Government to identify all such natural water resources in different parts of the State and wherever illegal encroachments are found, initiate_appropriate steps in accordance with the relevant provisions of law for restoring such natural water storage resources which have been classified as such in the revenue records to its original position so that the suffering of the people of the State due to water storage is ameliorated.

மேற்குறிப்பிட்டவாறு, பல்வேறு வழக்குகளில் மாண்பமை உச்சநீதிமன்றத்தாலும், உயர் நீதிமன்றத்தாலும் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளவாறும், வலியுறுத்தப்பட்டுள்ளவாறும் நீர்நிலைகளை ஆக்கிரமிப்பு செய்வது **சட்டப்படியான குற்றமாகும்** என்பதை இம்முறைமன்றம் சுட்டிக்காட்ட விழைகிறது.

இந்நிகழ்வு தொடர்பாக இம்முறைமன்றம் பின்வருமாறு ஆணையிடுகிறது:

சிவகாசி வருவாய் வட்டாட்சியர் தன்னுடைய **28.09.2021** நாளிட்ட செயல்முறையில், மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்புகளை தமிழ்நாடு நில ஆக்கிரமிப்பு சட்டத்தின் கீழ் உள்ள நடைமுறைகள் பின்பற்றி அகற்றுமாறு திருத்தங்கல் நகராட்சி ஆணையருக்கு உத்தரவிட்டு, ஒரு வருடம் கழித்தும், இம்முறைமன்றம் மேற்கண்ட ஆக்கிரமிப்பு குறித்த புகார் மனுவினை விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட பிறகுதான், குறிப்பிட்ட ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டுள்ளது என்பது சிவகாசி மாநகராட்சியின் சம்மந்தப்பட்ட அலுவலரின் மெத்தனப்போக்கே காரணம் என்று இம்முறைமன்ற நடுவம் சுட்டிக்காட்ட விரும்புகிறது. **2021**ம் ஆண்டே ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு இருக்குமேயானால், இவ்வாறான புகார் மனுக்களை சிவகாசி மாநகராட்சி தவிர்த்திருக்கலாம் என இம்முறைமன்ற நடுவம் கருதுகிறது. மேலும், மேற்குறிப்பிட்டுள்ள புல எண். **155/1A** சர்க்கார் புறம்போக்கு **21.63.5** ஹெக்டேர் கொண்ட கடம்பன்குளம் கண்மாய் சிவகாசி மாநகராட்சி கட்டுப்பாட்டில் இல்லை என்பதால், மாண்பமை உச்சநீதிமன்றமும், உயர்நீதிமன்றமும் பல்வேறு தீர்ப்புகளில், நீர்நிலை ஆக்கிரமிப்புகள் குறித்து தீர்ப்பு வழங்கிய நிலையில், எதிர்காலத்தில் ஆக்கிரமிப்பு ஏற்படாவண்ணம் உரிய பாதுகாப்பு நடவடிக்கையை, சிவகாசி மாநகராட்சி மற்றும் பொதுப்பணித்துறையுடன் இணைந்து எடுக்க, விருதுநகர் மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு பரிந்துரைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

மேலும் **2014** ஆம் ஆண்டைய தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச்சட்டத்தில் இம்முறை மன்றத்திற்கு உரிமையியல் நீதிமன்ற அந்தஸ்து அளித்துள்ள நிலையில், மனுதாரர் மேற்குறிப்பிட்ட ஆக்கிரமிப்பு பற்றி புகார் மனு அளித்து, அம்மனு இம்முறைமன்றத்தால் விசாரணைக்கு ஏற்றுக்கொள்ளப்பட்டும், விசாரணைக்கு மனுதாரரை நேரடியாக ஆஜராகும்படி கோரி அழைப்பாணை அனுப்பப்பட்டும், விசாரணைக்கு வராமல் இருந்தது மிகவும் கண்டிக்கத்தக்கது மட்டுமல்லாமல், இம்முறைமன்றத்தின் நேரத்தையும்

விரயமாக்கியுள்ளதால், விருதுநகர் மாவட்டம், சிவகாசி வட்டம், திருத்தங்கலைச் சேர்ந்த திரு.மூ. ஈஸ்வரன் அவர்களால் இம்முறைமன்ற நடுவத்திற்கு அளிக்கப்படும் மனுக்கள் மீது இம்முறைமன்ற நடுவத்தால் 6 (ஆறு) மாதங்களுக்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படாது என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2023-ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 18-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1)திரு மூ.ஈஸ்வரன்,
25, வையன் வீதி,
திருத்தங்கல் – 626 130.
சிவகாசி வட்டம்,
விருதுநகர் மாவட்டம்.

2)ஆணையர்,
சிவகாசி மாநகராட்சி,
சிவகாசி–626 123.

3)மாவட்ட ஆட்சியர்,
விருதுநகர் மாவட்டம்,
விருதுநகர்.

4)நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

5)இணை இயக்குநர்
ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை – 600 028.

நகல்.
மாண்புமிகு முறைமன்ற நடுவரின் தனிச்செயலர்
இகோ/உதிரிகள்

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக